**செய்தி வெளியீடு எண் : 1616** **நாள் : 16.09.2022**

<u>வேளாண் விளைபொருட்களுக்கு குறிப்பாக முந்திரிக்கு சந்தைக்கட்டணம் வசூலிப்பது தொடர்பான செய்தி</u>

விவசாயிகளுக்கு அவர்களுடைய விளைபொருட்களுக்கு இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி நியாயமான விலை கிடைக்க செய்வதற்காகவும் விளைபொருட்களின் வர்த்தகத்தை முறைப்படுத்துவதற்கும் 1987 –ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றப்பட்டு அதனை நடைமுறைப் படுத்துவதற்காக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. 40 வேளாண் விளைபொருட்கள் ஒரே சீரான அறிவிக்கை செய்யப்பட்டு 1 சதவீத சந்தை கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. முந்திரியைப் பொறுத்தவரையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முந்திரிக்கு சந்தை கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. அவ்வாறு கொண்டு வரப்படும் முந்திரி உருமாற்றம் செய்தோ அல்லது பக்குவப்படுத்தியோ தமிழ்நாட்டிலிருந்து விற்பனை செய்யும்பட்சத்தில் அந்த வர்த்தகம் சந்தை கட்டணம் செலுத்துவதற்கு உட்பட்டது. வேளாண் விளைபொருட்களை வேறு மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கோ, ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கோ பரிவர்த்தனை செய்யப்படும் போது உரிய ஆவணங்கள் வைத்திருந்தால் எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. தக்க ஆவணங்கள் மற்றும் சந்தை கட்டண இரசீது வைத்திருப்போருக்கு அலுவலர்களால் இடையூறு ஏற்படின் அதன் மீதான புகார்களை 24 மணி நேர கைபேசி 7200818155 என்ற எண்ணில் தெரிவிக்கலாம்.

விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வரும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு வணிகர்கள் ஒத்துழைப்பு நல்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in